செய்திப் பணிப்பாளர் /செய்தி ஆசிரியர் 21.02.2018

# செய்தி வெளியீடு

## தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(அடிப்படை 2013=100) :சனவரி 2018


**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்**

**தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு**

தொலைபேசி: 011-2147414 தொலைநகல்: 011-2877945 மின்னஞ்சல் prices@statistics.gov.lk


2018 சனவரி மாதத்திற்கான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(தே.நு.வி.சு.) பற்றிய அறிக்கையை வெளியிடுகையில் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி அமர சதரசிங்க அவர்கள், தே.நு.வி.சு.அடிப்படையான வருடத்தின் மீது வருட பணவீக்கமானது 2017 திசம்பர் மாதத்தில் 7.3% இருந்து 5.4% ஆக குறைவடைந்துள்ளது என தெரிவித்தார் 2018 சனவரி மாதத்தில் பதிவாகிய 5.4% பணவீக்கமே 2017 சனவரி மாதத்திலிருந்து பதிவாகிய ஆகக்குறைந்த பணவீக்கமாகும். 2018 சனவரி மாதத்தில் உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்து பணவீக்கத்திற்கான பங்களிப்புகள் முறையே 4.0%, 1.4% ஆக இருந்த அதேவேளை, 6.5% முதன்மைப் பணவீக்கத்தின் பெறுபேறாக 2017 சனவரி மாதத்தில் பணவீக்கத்திற்கான இந்த இரு பிரிவுகளிலினதும் பங்களிப்புகள் முறையே 2.9%, 3.6% ஆக காணப்பட்டன.

இருப்பினும், தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(தே.நு.வி.சு.) மாதம் மீது மாத மாற்றங்களை ஒப்பிடுகையில் 2017 திசம்பர் மாதத்தில் பதிவாகிய 126.6 இருந்து 2018 சனவரி மாதத்தில் 125.8 ஆக குறைவடைந்துள்ளது. இது, 2017 திசம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில் 2018 சனவரி மாதத்தில் 0.8 சுட்டெண் புள்ளி அல்லது 0.6 சதவீத புள்ளி குறைவொன்றைக் காட்டுகிறது. இந்த மாதம் மீது மாத மாற்றத்திற்கான காரணம், உணவுப்பொருட்களின் செலவுப் பெறுமதி 0.78% ஆல் குறைவடைந்தமையும் உணவல்லாப்பொருட்களின் செலவுப் பெறுமதி 0.11% ஆல் அதிகரித்தமையுமாகும்.

உணவுப்பொருட்களின் செலவுப் பெறுமதியின் குறைவுக்குக் காரணம் மரக்கறி, பச்சை மிளகாய், தேங்காய், சின்ன வெங்காயம், அரிசி, எலுமிச்சம்பழம், பெரிய வெங்காயம், மைசூர் பருப்பு, உருளைக்கிழங்கு, வெள்ளைப்பூடு மற்றும் முட்டை ஆகியவற்றின் விலைகள் குறைவடைந்தமையேயாகும். எனினும், சுட்டெண்ணில் அதிகரித்த செலவுப் பெறுமதிகள் புதிய மீன், வாழைப்பழம், மாம்பழம், பப்பாசிப்பழம், கோழி இறைச்சி, மிளகாய்த் தூள் மற்றும் கருவாடு என்பன பொருட்டு பதிவாகின.

முந்திய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2018 சனவரி மாதத்தில் உணவல்லாப்பொருட்களின் செலவுப் பெறுமதியின் அதிகரிப்புக்குக் காரணம், ‘உணவகமும் ஹோட்டல்களும்’, ‘போக்குவரத்து’, ‘நானாவிதப் பொருட்களும் சேவைகளும்’, ‘கல்வி’, ‘சுகாதாரம்’ மற்றும் ‘ஆடையும் காலணியும்’ ஆகிய பிரிவுகளில் ஏற்பட்ட செலவுப் பெறுமதியின் அதிகரிப்பேயாகும். மேலும், முந்திய மாதத்துடன் ஒப்பிடுகையில் ‘தளபாடம், குடித்தன உபகரணம் மற்றும் வழமையான குடித்தன பராமரிப்பு’, மற்றும் ‘அற்ககோல் பானங்கள், புகையிலை மற்றும் தியக்கமருந்துகள்’ ஆகிய பிரிவுகள் பொருட்டு செலவுப் பெறுமதியில் ஓரளவு சற்று அதிகரிப்பு பதிவாகியது. ‘வீடமைப்பு, நீர், மின்வலு, எரிவாயு, ஏனைய எரிபொருள்கள்’, ‘தொடர்பாடல்’ மற்றும் ‘பொழுதுபோக்கும் கலாசாரமும்’ ஆகிய பிரிவுகளின் செலவுப் பெறுமதியில் இம்மாதம் மாற்றம் எதுவும் காணப்படவில்லை.




**தே.நு.வி.சு. இன் அசைவுகள் (அடிப்படை : 2013 = 100)**

| வருடம் | மாதம் | சுட்டெண் | சுட்டெண்ணிற்கான மாதத்திற்கு மாதம் % மாற்றம் | புள்ளிக்கு புள்ளி பணவீக்க% |
|---|---|---|---|---|
| **2017** | சனவரி | 119.3 | 1.1 | 6.5 |
| | பெப்ரவரி | 119.9 | 0.5 | 8.2 |
| | மார்ச் | 119.5 | -0.3 | 8.6 |
| | ஏப்ரல் | 121.0 | 1.3 | 8.4 |
| | மே | 121.8 | 0.7 | 7.1 |
| | யூன் | 123.4 | 1.3 | 6.3 |
| | யூலை | 122.4 | -0.8 | 6.3 |
| | ஓகஸ்ட் | 122.3 | -0.1 | 7.9 |
| | செப்ரெம்பர் | 123.3 | 0.8 | 8.6 |
| | ஒக்ரோபர் | 124.8 | 1.2 | 8.8 |
| | நவம்பர் | 126.4 | 1.3 | 8.4 |
| | திசெம்பர் | 126.6 | 0.2 | 7.3 |
| **2018** | சனவரி | 125.8 | -0.6 | 5.4 |

*தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்*